# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1992 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம்

---

*[1992, மார்ச் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1992, மார்ச் மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45

தபாற் செலவு : ரூபா 1.00

## 1992 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம்

[1992, மார்ச் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 86/90

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தின் 23ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (உ) என்னும் பந்தியில் "ஏற்றதன் பிறகு; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏற்றதன் பிறகு;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(ஊ) அத்தகைய உறுப்பினர்—

(i) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 22 ஆம் இலக்க, அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைத்தற் கட்டளை ஒன்றினால் அத்தகைய தொழிற்பொறுப்பு முயற்சியை கையேற்று, கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகப் பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்று ஸ்தாபிக்கப்பட்டதன்மேல் தொழிற் பொறுப்பு முயற்சியொன்றில் தொழிலுக்கமர்த்தப்படா தொழிந்து அவ்வாறு தாபிக்கப்பட்ட பகிரங்கக் கூட்டுத் தாபனத்தில் தொழில் ஏற்காதுள்ள பிறகு;

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால், விடயத்துக்கேற்றுற்போன்று அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பணிகளைக் கையேற்கும் அல்லது அத்தகைய தொழிற் பொறுப்பு முயற்சியைக் கையேற்று, கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காகப் பகிரங்கக் கம்பெனியொன்று கூட்டிணைக்கப்பட்டதன்மேல், விடயத்துக்கேற்றுற்போன்று, பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றில் அல்லது தொழிற்பொறுப்பு முயற்சியொன்றில் தொழிலுக்கமர்த்தப்படாதொழிந்து, அவ்வாறு கூட்டிணைக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியில் தொழில் ஏற்காதுள்ள பிறகு;

2—டி 015761—1,195(92/08)

(iii) அந்த உறுப்பினரின் ஆட்குறைப்பின்மீது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற் தொழிலுக்கமர்த்தப்படா தொழிந்த பிறகு;

(iv) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அல்லது அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் தொழிற் பொறுப்பு முயற்சி மூடப்பட்டதன்மேல் அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கமர்த்தப்படாதொழிந்த பிறகு.".

(3) அதன் கடைசிப் பந்திக்கு பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

"இப்பிரிவில்—

(i) "தொழிற் பொறுப்புமுயற்சி" என்பது, 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்புமுயற்சிகள் (கொள்ளுதல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் கொள்ளப்பட்ட அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிற் பொறுப்புமுயற்சி என்று பொருள்படும்;

(ii) "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் உள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) "பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலாளர்" என்பது, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு மருத்துவத்தொழிலர் என்று பொருள்படும்; அத்துடன்

(iv) "ஆட்குறைப்பு" என்பது கைத்தொழிற்பிணக்குகள் சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.